

மதுரை அவனியாபுரத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் மூத்த தலைவர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் திருப்பரங்குன்றம் தொகுதி கழக வேட்பாளர், தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கிருத்திகா தங்க பாண்டியனுக்கு ஆதரவாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் பகுதி செயலாளர் ஈஸ்வரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள், கூட்டணி கட்சியினர், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் முகாம் அலுவலகத்தில் 'திராவிட மாடல்' ஆட்சியால் ஈர்க்கப்பட்டு பல்வேறு கட்சிகளில் இருந்து 200 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் விலகி மண்டல பொறுப்பாளர்,அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்து கொண்டனர். உடன் தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி, தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், முன்னாள் மாவட்ட செயலாளர்கள் தடங்கம்.பெ.சுப்ரமணி, தருமசெல்வன், நகர செயலாளர்கள் நாட்டான் மாது, எம்.பி. கௌதம் மற்றும் தி.மு.க, நிர்வாகிகள் உள்ளனர்.

## தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு

# தமிழ்நாடு அனைத்து கட்டிட - உடல் உழைப்புத் தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு ஆதரவு!

## மாநிலத் தலைவர் ஆர்.கே.சந்திரசேகரன் – பொதுச் செயலாளர் ஏ.டி.மோகன் அறிவிப்பு!

சென்னை, ஏப். 18 -

தமிழ்நாடு அனைத்து கட்டிட மற்றும் உடல் உழைப்பு தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு மாநிலத் தலைவர் ஆர்.கே.சந்திரசேகரன், பொதுச் செயலாளர் ஏ.டி.மோகன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு கட்டிட மற்றும் உடல் உழைப்பு தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில பொதுச் செயலாளர் ஏ.டி.மோகன் தலைமையில் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள், கலந்து ஆலோசித்து தற்போது நடைபெற இருக்கின்ற 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எங்களது கூட்டமைப்பு சங்கம் முழு ஆதரவை தருகிறது.

கழக வெற்றிக்காக எங்களது தொழிலாளர்கள் அயராது பாடுபடுவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.



கடலூர் கிழக்கு மாவட்டம், குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி, மேட்டுக்குப்பம், கருங்குழி, நைனார்குப்பம், அரங்கமங்கலம், ராசாக்குப்பம், அயன்குறிஞ்சிப்பாடி, கல்குணம், ஆடூர்குப்பம், விருப்பாட்சி உள்ளிட்ட கிராமங்களில் கழக வேட்பாளர், அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுப்பட்டார். தி.க.துரை.சந்திரசேகர், ம.தி.மு.க. என்.இராமலிங்கம், சி.பி.ஐ. பி.துரை, வி.சி.க. சிவசக்தி, ராஜ்குமார், காங்கிரஸ் பாலகிருஷ்ணன், குமார், சிபிஎம்.மகேஷ், தே.மு.தி.க. பாலமுருகன், ஒன்றிய கழக செயலாளர்கள் வி.சிவக்குமார், ஆர்.நாராயணசாமி உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

## வஞ்சகன் மோடியடா!

# சம்பந்தி வழக்கை முடிக்க சேராத இடம் சேர்ந்த எடப்பாடி!

## திண்டுக்கல்லில் 'கர்ணன்' படப் பாடல் பாடி இரா.முத்தரசன் தேர்தல் பிரச்சாரம்!

*திண்டுக்கல், ஏப். 18 -*

சம்பந்தி வழக்கை முடிப்பதற்காக சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்தாயடா, வஞ்சகன் மோடியடா என்று கர்ணன் படத்தில் வரும் பாடலை மெட்டு கட்டி பாடி வாக்கு சேகரித்தார் சி.பி.ஐ. கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான முத்தரசன். அது பற்றிய விவரம் வருமாறு.



புதனன்று திண்டுக்கல் நகரில் தி.மு.க. வேட்பாளர் ஐ.பி. செந்தில்குமாருக்கு வாக்கு சேகரித்து பேசும் போது இவ்வாறு பேசினார். மேலும் அவர் பேசுகையில்,

இது என்ன நாடாளுமன்றத் தேர்தலா இது சட்டமன்றத் தேர்தலா என்று கேட்கிறார்.

இது சட்டமன்ற தேர்தல் தான் இந்த சட்டமன்றத் தேர்தலில் மூலமாக

தமிழ்நாட்டுக்குள் நுழைய முடியாத ஒரு கட்சி ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இல்லாத கட்சி. பாசிச கொள்கையை நம்பக்கூடிய கட்சி . அ.தி.மு.க. தோள் மீது ஏறிக் கொண்டு வருவதை அனுமதிக்கலாமா என்பது தான் கேள்வி.

பாரதிய ஜனதா கட்சியை பற்றி நாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

பெயருக்குத்தான் பாஜகவே தவிர. அது முழுக்க முழுக்க ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளை பின்பற்றக் கூடிய அமுல்படுத்தக்கூடிய கட்சி . தமிழ்நாட்டில் வருகின்ற 23ஆம் தேதி தேர்தல் நடக்க இருக்கிறது மேற்கு வங்கத்தில் 23ஆம் தேதியும் 29 ஆம் தேதியும் இரண்டு கட்டமாக தேர்தல் நடைபெற இருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் நடத்தப்படுகின்றனர்.

இது நியாயம்தானா? இது தான் ஜனநாயகமா ? தமிழ்நாட்டில் உள்ள 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் பரப்புரையில் இருக்கிறார்கள். அதே போல் மேற்கு வங்கத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் பரப்புரையில் இருக்கிறார்கள்

தமிழக முதல்வரின் அறிக்கை அனைத்து நாளேடுகளிலும் வந்துள்ளது. நடுநிலையான பெரியவர்களை ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை உடையவர்களை தயவு செய்து முதலமைச்சரின் அறிக்கையை படித்து பாருங்கள் ஒரு முறைக்கு இருமுறை படித்துப் பாருங்கள்.

இந்த தொகுதிகள் அதிகரிப்பதின் மூலமாக தமிழ்நாடு உட்பட தென் மாநிலங்களை புறக்கணித்து வடமாநிலத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து நிரந்தரமாக இந்தியாவை பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சியை உருவாக்கி கொள்கின்ற தந்திர முயற்சியாக இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

அண்ணன் எடப்பாடி பழனிச்சாமி சிக்க கூடாத இடத்தில் சிக்கியுள்ளார்..

தெரிந்தோ தெரியாமலோ சிக்கிவிட்டார். . கர்ணன் திரைப்படத்தில் கண்ணதாசனின் பாடல்கள் வரும் செஞ்சோற்று கடன் தீர்க்க சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்தாயடா கர்ணா வஞ்சகன் கண்ணனடா. அந்தக் கண்ணதாசன் தற்போது இல்லை. அவர் இருந்திருந்தால் என்ன பாடுவார் தெரியுமா சம்பந்தியின் வழக்கை முடிக்க சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்தாயடா எடப்பாடி பழனிச்சாமி வஞ்சகன் மோடியடா என்று இன்று பாட்டு பாடி இருப்பார் அப்படி போய் வலையில் சிக்கிக் கொண்டார் சிலந்தி வலையில் சிக்கிக் கொண்ட ஈயை போல சிக்கி தவித்துக் கொண்டிருக்கிறார் . என்ற இரா.முத்தரசன் அவர்கள் செந்தில்குமாருக்கு உதய சூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார்.

## திருப்பத்தூர் தொகுதி கழக வேட்பாளர்

# அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பனுக்கு - அரளிக்கோட்டையில் உற்சாக வரவேற்பு!

*சிவகங்கை, ஏப். 18 -*

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் சிவகங்கை மாவட்டக் கழகச்செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் போட்டியிடுகிறார். அவர் கடந்த 10 நாட்களாக தொகுதி முழுவதும் கிராமம் கிராமமாகச் சென்று தீவிரமாக வாக்கு சேகரித்து வருகிறார் . நேற்று சிங்கம்புணரி தெற்கு ஒன்றியத்தில் காலையில் தனது தேர்தல் பிரச்சாரத்தை துவக்கினார்.

அமைச்சரின் சொந்த ஊரான அரளிக்கோட்டையில் வாக்கு சேகரித்த அமைச்சர் பெரியகருப்பனுக்கு பெண்கள் குலவையிட்டும், ஆரத்தி எடுத்தும் உற்சாகமாக நீண்ட வரிசையில் நின்று வரவேற்றார்கள்.

கருப்பன் கருப்பாயி சிலம்பாட்டம் பயிற்சி மானவ, மாணவிகள் 50க்கும் மேற்பட்டவர்கள் சிலம்பம் சுத்தியவாறு அமைச்சர் வேட்பாளர் கேஆர்.பெரியகருப்பனை அழைத்துச் சென்றனர். வேட்பாளர் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அரளிக்கோட்டை, அரளிக்கோட்டை ஆதி திராவிடர் காலனி, ஜமீன்தார் பட்டி, இ. கணேசபுரம், ஆபத்தாரனம்பட்டி , ஏரியூர் ,எஸ். மாம்பட்டி, உலகினிப்பட்டி உட்பட 75க்கும் மேற்பட்ட கிராமங்களில் மக்களிடையே வாக்கு சேகரித்து பேசியதாவது .

கடந்த நான்கு முறை இத்தொகுதியில் போட்டியிட்ட எனக்கு தொகுதி மக்கள் பேராதரவு கொடுத்து

வாக்களித்தீர்கள். இத்தகைய தொடர் ஆதரவு தந்த தன் மூலமாக தொடர்ந்து வெற்றி பெற்றேன் ஐந்தாவது முறையாக கழக தலைவர் தளபதி அவர்களின் சார்பில் நான் மீண்டும் போட்டியிடுகிறேன்.

தொகுதி மக்களாகிய நீங்கள் இந்த முறை எனக்கு தொடர்ந்து ஆதரவு கொடுத்து வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன். கடந்த நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட நான்மக்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றி உள்ளேன்.

விடுபட்ட கோரிக்கைகளை உங்களின் தேவைகளை தொடர்ந்து நிறைவேற்றுவேன் என்று உறுதி கூறுகிறேன். தமிழகத்தில் முதல்வர் தளபதி அவர்கள் நல்லாட்சி தொடர எனக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கேஆர்.பெரியகருப்பன் பேசினார்.

வேட்பாளருடன் சிங்கம்புனரி தெற்கு ஒன்றிய செயலாளர் கே. பாலசுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர் பி .ஆர். பெருமாள், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது,ஒன்றிய துணை செயலாளர் எஸ்.முத்துக்குமார் , நிர்வாகிகள்பில்லப்பன், புகழேந்தி, பி .ஆர். ராஜேஷ் , மாதவன், நாகு முத்து, முனியாண்டி மாவட்ட மாணவரணிஅமைப்பாளர் கதி. ராஜ்குமார் , அயலக அனிசன்சீமான் சீமான் சுப்பையா, சதீஷ் , பாலா, முன்னால் ஊராட்சி மன்ற தலைவர் பில்லப்பன், மணி, மாவட்ட இலக்கிய அணி துணை செயலாளர் செல்வ குமார் , காளிதாஸ், உட்பட கூட்டணி கட்சியினர் சென்றார்கள்.சுட்டெரிக்கும் வெயிலை பொருட்படுத்தாமல் ஏராளமான பெண்கள் வரவேற்றார்கள்.



திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் சி.வி. கணேசன் பெண்ணாடம் நகரத்தில் வாக்கு சேகரித்தார். உடன் நகர கழக செயலாளர் எம். குமரவேல் மற்றும் கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள் வாக்கு சேகரித்தனர்.

## கழகத் துணைப் பொதுச் செயலாளர்

# கனிமொழி கருணாநிதி எம்.பி.



## தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயண விபரங்கள் (கடலூர் , மயிலாடுதுறை)

**18.04.2026 (சனிக்கிழமை)**

| நேரம் | இடம் |
|---|---|
| 04:00 PM | **விருத்தாச்சலம் தொகுதி -** கூட்ரோடு, கருவேப்பிலங்குறிச்சி |
| 05:00 PM | **நெய்வேலி தொகுதி -** பண்ருட்டி – கும்பகோணம் மெயின்ரோடு NLC ஆர்ச் கேட் அருகில் |
| 06:00 PM | **குறிஞ்சிப்பாடி தொகுதி -** அண்ணா பேருந்து நிலையம் அருகில் |
| 07,00 PM | **புவனகிரி தொகுதி -** புவனகிரி பேருந்து நிலையம் அருகில் |
| 08,00 PM | **மயிலாடுதுறை தொகுதி -** திருக்கடையூர் கடைவீதி |